ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறைகள்,
சென்னை–5
முன்னிலை: திரு சு.பார்த்திபன், B.Sc.,

ந.க.எண். இ5/12748/2020 நாள்.26.09.2022.

பொருள்: பணியாளர் தொகுதி – ஆதிதிராவிடர் நலம் –தமிழ்நாடு அமைச்சுப்பணி– தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தொகுதி–IVல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணி–2018–2019, மற்றும் 2019–2020ல் ஆண்டுக்குரிய இளநிலை உதவியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணி நியமனம் செய்யப்பட்டது– பணிவரன்முறை செய்து – ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடித எண். 2334/PSD–C2/2020. நாள்.20.10.2021.
2. ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் செயல்முறைகள் எண்.இ5/12748/20, நாள். 11.12.2021.
3. சம்மந்தப்பட்ட ஆவணங்கள்.

*****

**ஆணை:–**

பார்வை 1–இல் கண்டுள்ள கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு இளநிலை உதவியாளராக ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு உ.தியாகராஜன் என்பவருக்கு பார்வை 2–இல் காணும் செயல்முறைகளின் மூலம் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து 14.12.2021 முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நேர்வில், திரு உ.தியாகராஜன் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 14.12.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகால தொடர் பணியில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண்பருவத்தை திருப்திகரமாக முடித்திட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்.

தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்வில் (DOM Test)தேர்ச்சி பெறுதல் மற்றும் பவானிசாகர் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகிறது. இவர் தகுதிகாண்பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற்று வழங்கப்பட வேண்டும்.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்

பெறுநர்.
திரு உ.தியாகராஜன்,
இளநிலை உதவியாளர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை–05.

நகல்.

1. முக்கிய ஆணைத் தொகுப்பு.